ISSUE 3 | FEB | 2024

# தமிழகம் கியூபெக் கலாச்சாரச்சங்கம்

## தமிழ்ச்சிட்டுக்கள் மின்னிதழ்

**தை 2024**

**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
-பாரதியார்**

# எங்களை பற்றி ...

தமிழகம் கியூபெக் கலாச்சாரச் சங்கம் ஒரு இலாப நோக்கற்ற, கட்சி சார்பற்ற தமிழ் சமூக அமைப்பாகும், இது கியூபெக்கிலுள்ள தமிழ்நாட்டு, இந்தியத் தமிழர்களிடையே தமிழ் கலாச்சார விழுமியங்களை மேம்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது . தமிழகம் கியூபெக் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம்.

தமிழகம் கியூபெக் கலாச்சாரச் சங்கம் முன்னெடுக்கும் முக்கிய நிகழ்வுகள் தீபாவளி கொண்டாட்டம், தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள், கோடை க்கால குடும்ப உல்லாசப் பயணம் மற்றும் ஒன்றுகூடல்.கியூபெக் மற்றும் மொன்றியலில் உள்ள தமிழ் பேசும் மக்களின் கலாச்சார மற்றும் சமூக தொடர்புகளுக்கு தமிழகம் கியூபெக் ஒரு இணைப்பை வழங்குகிறது, குறிப்பாக நுண்கலைகள், இலக்கியம், மொழி மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நிறம், மதம், இனம், மதம்,பாலினம் அல்லது தேசிய வம்சா வளியைப் பொருட்படுத்தாமல் ஆர்வமுள்ள அனைத்து நபர்களிடையே தமிழ்நாடு, இந்தியாவின் கலாச்சாரம் பற்றிய நல்லெண்ணம், புரிதல் மற்றும் பாராட்டுதலை ஊக்குவிக்க இந்த அமைப்பு முயல்கிறது

தமிழகம் கியூபெக் உள்ளூர் கலைஞர்களை குறிப்பாக இளம் தலைமுறையினரின் திறமைகளை ஊக்குவிக்கிறது. மே லும், தமிழகம் கியூபெக் தங்களது சகோதர அமைப்பான கியூபெக் தமிழ்கல்வி நிலையம் மூலம் தமிழ் சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்க வகுப்புகளை நடத்தி வருகிறது.

சொந்த மண்ணை விட்டு கல்வி , பொருளாதாரம் போ ன்ற தேவைகளுக்காக புலம்பெயந்த தமிழ் நாட்டு தமிழ் மக்களை ஒன்றிணைத்து சமூகமாக ஒற்றுமையுடன் தமிழனமாகி தலை நிமிரவேண்டும் என்ற சமூக அக்கறையுடன் பல்வேறு நிகழ்வுகளை பல வருடங்களாக வெற்றிகரமாக தமிழால் இணைவோம் என்ற கொள்கையோடு நடத்திவருகிறது .

நமது தமிழ் மொழியின் சிறப்பு, இலக்கியம் படை ப்புகளை கொண்டு சேர்க்கவும் , வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் "தமிழ் சிட்டுக்கள்" என்ற மின்னிதழ் வெளியிட்டுள்ளது .

# திருக்குறள்

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள். இது மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகிவற்றைப்பற்றி விளக்கும் நூல்.இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்றும் அனைவருக்கும் தெரியும். இந்த திருக்குறளைப்பற்றி சில அரிய தகவல்..

- திருக்குறளில் உள்ள மொத்த சொற்கள் - 14 ஆயிரம்
- தமிழ் எழுத்துக்கள் 247-ல், 37 எழுத்துக்கள் திருக்குறளில் இடம்பெற வில்லை.
- திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42 ஆயிரத்து 194
- அனிச்சம், குவளை ஆகிய இரண்டு மலர்கள் மட்டும்தான், திருக்குறளில் இடம் பிடித்துள்ளன
- திருக்குறளில் இடம்பெற்ற ஒரே பழம், நெருஞ்சிப் பழம்.
- தமிழ் உயிர்எழுத்துக்களில் ஒன்றான ‘ஔ’ மட்டும், திருக்குறளில் இடம்பெறவில்லை.
- திருக்குறள் நூலில் இடம் பெற்ற இரண்டு மரங்கள், பனை மற்றும் மூங்கில்.
- திருக்குறளில், ‘9’ என்ற எண் இடம்பெற வில்லை. அதே சமயம் ‘7’ என்ற எண், எட்டு குறள்களில் இடம்பெற்றுள்ளது.
- திருவள்ளுவர், திருக்குறளில் பாடியிருக்கும் ஒரே விதை ‘குன்றின்மணி’
- திருக்குறள் இதுவரை 80 மொழிகளில், மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.
- நரிக்குறவர் பேசும் வக்போலி மொழியிலும், திருக்குறளை மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார்கள்.



# தமிழக அரசு சின்னம் உருவான கதை

நேரு ஆட்சியில் இருந்தபோது மாநிலங்களுக்கானத் தனி முத்திரைகளை முடிவு செய்வது குறித்து, அந்தந்த மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதுகின்றார்.

தமிழகத்தில் அப்போது ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதல்வராக இருந்தார். அவர் தமிழகத்தின் தனி முத்திரைக் குறித்து அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை- ஆய்வு நடத்தினார்.

கடைசியாக, திருவில்லிப்புத்தூரின் கோயில் கோபுரத்தையே ‘தமிழகத்தின் தனி முத்திரை’ சின்னம் என்று தேர்வு செய்து டெல்லிக்கு அனுப்பி வைத்தார்.

அதைக்கண்ட நேருக்கு அதிருப்தி. “என்ன இது, நாம் மதசார்பற்ற ஜனநாயக நாடென்று இருக்கின்றோம், நீங்கள் இப்படி ஒரு இந்து கோயில் கோபுரத்தை ‘மாநில சின்னமாக’ அனுப்பி வைத்துள்ளீர்கள். இது சரியா? என்று கேட்கின்றார்.

அதாவது, எல்லா மதத்தவரும் உள்ள நாட்டில்- மாநிலத்தில் தனிப்பட்ட ஒரு மதத்தினருக்கான இந்து ‘கோயில் கோபுரத்தை’ சின்னமாக எப்படி அறிவிக்கலாம் என்பது நேருவின் அதிருப்தி கேள்வி.

பதிலளித்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், “நான் தேர்வு செய்தது இந்து மதத்தின் கோயில் என்ற அடிப்படையில் அல்ல. அந்த கோயில் கோபுரம் இந்து மதத்திற்கானதும் அல்ல.

தமிழகத்தைத் தாண்டி மற்ற எல்லா மாநிலங்களிலும்தான் இந்து மதம் உள்ளது. இந்து கோயில்கள் உள்ளன. எந்த கோயில் கோபுரங்களாவது தமிழக கோயில் கோபுரங்களைப் போல் உள்ளதா? இருக்கின்றதா? அப்படியே இருந்தாலும் அது தமிழர்கள் கட்டிய கோயிலாகத்தான் இருக்கும்.

இந்த மாதிரியான கோயில் கோபுரங்கள் தமிழர்களின் கலைப் பண்பாட்டு வடிவங்கள். தமிழர்களின் கட்டிடக்கலை. இப்படியானது வேறு எந்த நாட்டிலும்- மாநிலங்களிலும் இல்லை.

அதனாலேயே நான் கோயில் கோபுரங்களைத் தனிச்சின்னமாக, தமிழர்களின் அடையாளமாக, தமிழகத்தின் முத்திரையாகத் தேர்வு செய்தேன்” என்று விளக்கமளித்தார். பிரதமர் நேருக்கு உண்மை தெளிந்தது. கோயில் கோபுரத்தையே தமிழகத்தின் ‘தனிச் சின்னமாக’ ஏற்றுக்கொண்டு அறிவித்தார்
















# SAVIO

**AGE: 6 YEARS OLD**





**SHARON AMARNATHPRABHU**



**AGE: 9YEARS OLD**

**SCHOOL: ECOLE JEAN -GROU (4 ÉM ANNÉE)**




## SARAH AMARNATH



**AGE: 12YEARS OLD**

**SCHOOL: PIERRE-LA PORTE (SECONDARY 1**








**VARUN AADHARSH**

**GRADE 6**



## KEERTHIKA DAYA

**AGE: 7 YEARS OLD**







**RENURAJ MOHAN**

**AGE: 12 YEARS OLD**





## ரிஷ்வந்த் இளவரசன்


வயது : 8





ஷன்வித் இளங்கோவன்

வயது : 3









## விவித்குமார்

**வயது : 11**

# பாட்டி வைத்தியம்

பெரும்பாலும் வீடுகளில் உள்ள பெரியோர்கள் குறிப்பாக பாட்டிமார்கள், இக்கட்டான சூழ்நிலையிலும் ஒரு சில உடனடி வைத்திய குறிப்புகளை கைவசம் வைத்திருப்பார்கள். தங்கள் குடுப்பதிலோ அல்லது அக்கம் பக்கத்திலோ யாருக்காவது உடம்பு சரிவரவில்லை என்றால் உடனடியாக தங்கள் கை வைத்திய முறைகளை பரித்துரைப்பார்கள். இதில் என்ன குறிப்பிட்ட விடயம் என்றால் அனைத்து மருந்துகளும் வீட்டில் உள்ள உணவு பொருட்கள் சார்ந்தே இருக்கும். வீடு மற்றும் அக்கம் பக்கத்தில் கிடைக்கும் பொருட்களை கொண்டு சொல்கிற வைத்திய குறிப்புகள் பெரும்பாலும் பல வியாதிகளை குணப்படுத்துகிறது என்பது வியப்புக்குரியது.

பொதுவாக நமது நாட்டில் கிடைக்கும் அனைத்து உணவு பொருட்களுமே ஓர் இயற்கை மருந்துகள். இந்த உணவு பொருட்கள் மற்ற நாட்டில் விளைவதில்லை. இந்த அற்புதமான உணவே மருந்து விடயங்களும் மற்ற நாட்டினர்களுக்கு கிடைப்பதும் இல்லை. எடுத்துக்காட்டாக இஞ்சி, ஏலக்காய், மிளகு, சீரகம், இலவங்க பட்டை, மற்றும் பல அறிய வகை உணவு பொருட்கள் இயற்கை மருந்தாக நம் உடலை காத்து வருகின்றனர். இத்தகைய உணவு பொருட்கள் மற்ற நாட்டின் சீதோஷண நிலைகளுக்கு வளர்வதில்லை. உணவே மருந்து மற்றும் பாட்டி வைத்தியம் நம்முடைய நாட்டிற்கும் நம் மக்களுக்கும் கிடைத்த அறிய பொக்கிஷம்கள் ஆகும்

அஜீரணம்

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.

குடல்புண்

மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.

வரட்டு இருமல்

எலுமிச்சம் பழசாறு, தேன் கலந்து குடிக்க வரட்டு இருமல் குணமாகும்.

# குழந்தை நீதி கதைகள்

# தொட்டதெல்லாம் பொன்னாக.. அடிச்சுது பாருங்க யோகம்..

ஹாய் குட்டிஸ், எல்லாரும் எப்படி இருக்கீங்க. தேவதைகள் வந்து திடீரென உங்களுக்கு எதாவது வரம் கொடுத்தா நீங்க என்ன கேட்பீங்க. இவங்க என்ன கேட்டாங்கன்னு நீங்களே பாருங்க.

அவன் சரியான புலம்பல்வாதி, யாரோ இருவர் பேசிக்கொண்டிருக்க அதை கேட்டபடியே அதை கண்டுகொள்ளாமல் நடந்தான் ஆல்பர்ட். அவன் அந்த அளவுக்கு வறுமை கோட்டில் வாழவில்லை என்றாலும் பெரிய பணக்காரன் இல்லை. கடினமாக உழைத்தாலும் அதை குறை சொல்ல கூடியவன். என்னதான் உழைத்தாலும் நிறைய தங்கம் நம்மிடம் இல்லையே என சலித்து கொள்வான். வருவதும் போவதும் அவனுக்கு சரியாக இருந்தது. அழகான, அன்பான மனைவி.

அவனுக்கு போதுமான அளவுக்கு நல்ல வாழ்க்கை. சந்தோசமாக வாழாமல் எதற்கெடுத்தாலும் புலம்பல். வீட்டில் நிறைய சேர்த்து வைக்க வேண்டும். கை நிறைய தங்கம் வேண்டும். பணக்காரனாக வேண்டும். அவன் புலம்பல் கேட்டு அந்த ஊரில் வாழும் அனைவருக்குமே சலிப்பு தட்டியது. ஆனால் அவன் நல்ல வேலைக்காரன் என்ற பெயரை மட்டும் வாங்கியிருந்தான்.

ஒரு நாள் காட்டுவழியே இப்படி புலம்பிக்கொண்டே நடக்க அவன் முன் ஒரு தேவதை தோன்றினாள். ஆல்பர்ட், ஆல்பர்ட் ஏன் இவ்வளவு புலம்புகிறாய். தேவதையை பார்த்த ஆல்பர்ட், உனக்கென்ன தெரியும் இங்க சந்தோசமா வாழணும்னா நிறைய நகை பணம் வேண்டும். அதுதான் என்கிட்டே இல்லையே, இருந்திருந்தால் நானும் சந்தோசமாக இருப்பேன் என்றான். சரி நான் உனக்கு உதவுகிறேன் என்ன வேண்டும். சட்டென சிந்தனையில் எதுவும் வராத ஆல்பர்ட், நான் தொடுற எல்லாமே பொன்னாக வேண்டும் என்றான். அப்படியா சரி அப்படியே ஆகட்டும் என்றாள் தேவதை.

# குழந்தை நீதி கதைகள்

## தொட்டதெல்லாம் பொன்னாக.. அடிச்சுது பாருங்க யோகம்..

சோதித்து பார்க்கவா என்று கேட்க, தேவதையும் சரி என தலையாட்டினாள். அருகில் இருந்த ஒரு மரத்தின் குச்சியை தொட்டான். அது தங்கமாக மாறியது. அவ்வளவுதான் துள்ளி குதித்து இப்போதே வீட்டுக்கு போய் எல்லாத்தையும் தொடணும் என ஓடினான்.

வீட்டுக்கு போனதும், அங்கிருந்த பொருட்கள், பாத்திரங்கள் என அனைத்தையும் தொட்டான். எல்லாமே தங்கமாக மாற சந்தோஷத்தில் குதித்தான். அவனுக்கு பசி வரவே அருகில் இருந்த மாம்பழத்தை எடுத்தான். அவன் வாய் பக்கம் வருவதற்குள் அது தங்கமாக மாற, அய்யயோ என்னடா இது இன்னொரு பழத்தை எடுக்க அதுவும் தங்கமாக மாற அவனுக்கு மனசே கஷ்டமானது. மனைவியை அழைத்து நடந்ததை சொல்ல, அவள் அவனுக்கு பழத்தை எடுத்து ஊட்டினாள். அவனும் தீர்வு கிடைத்தது போல மகிழ்ச்சி அடைந்தான். சந்தோஷத்தில் அவளை கட்டிப்பிடிக்க கண் இமைக்கும் நொடிக்குள் மனைவி தங்கமாக மாற ஆரம்பித்தாள்.
அவனால் தாங்க முடியாத சோகத்தில் ஆழ்ந்தான். என்ன செய்வதென தெரியாமல் அழ ஆரம்பித்தான். அப்போதுதான் தெரிந்தது தங்கத்தைவிட வாழ்க்கையில் முக்கியமான விஷயங்கள் நிறைய இருக்கிறது என்பதை உணர்ந்தான். அவன் அழுவதை பார்த்த தேவதை அவனிடம் எல்லாத்தையும் திரும்பி பழைய நிலைக்கு தருகிறேன் ஆனால் உன்னால் மீண்டும் எதை தொட்டாலும் தங்கம் ஆக்க முடியாது, இல்லையென்றாலும் இந்த வரத்துடன் இப்படியே தங்கம் நிறைய நீ எதிர்பார்த்த வாழ்க்கை கிடைக்கும் என சொன்னாள்.

ஆல்பர்ட், எனக்கு எந்த வரமும் வேண்டாம். என் மனைவி மீண்டும் பழைய நிலை வந்தாலே போதும் என்றான். அப்போ இந்த தங்கமெல்லாம் காணாமல் போய்விடுமே என்று தேவதை சொல்ல, பரவாயில்லை எனக்கு வாழ்க்கையில் எது முக்கியம் என்பது தெரிந்துவிட்டது. ஆகையால் அவளை திருப்பி கொடுங்கள் என்று கேட்க தேவதை அல்பெர்ட்டின் மனைவியை பழைய நிலைக்கு மாற்றினாள். ஆல்பர்ட் அதன் பிறகு புலம்புவதையே நிறுத்திவிட்டான்.

குழந்தைகளே உங்களுக்கு என்ன
புரிந்தது என்று உங்கள்
பெற்றோரிடம் சொல்லுங்கள்!

# தமிழ் கவிதை

**கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய, ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசை பண்புச் சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம் ஆகும். மேலும், மொழியில் உள்ள ஒலியின் அழகியல், ஒலிக் குறியீடுகள், மற்றும் சந்தம் ஆகியவற்றுடன் இடம், இயல்பான பொருள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுவதாகக் கவிதை உள்ளது. உணர்ச்சி, கற்பனை, கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது.**

**"வேப்பம் பூ மிதக்கும்
எங்கள் வீட்டு கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்துக்கு ஒரு முறை
விஷேசமாக நடக்கும்.**

**ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்...
கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
துருப்பிடித்தக் கட்டையோடு
உள் விழுந்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்...
எடுப்போம் நிறையவே!**

**'சேறுடா சேறுடா' வென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?**

**படை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேலே வருவார்.**

**இன்று வரை அம்மா
கதவுக்குப் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.**

**கடைசி வரை அப்பாவும்
மறந்தேப் போனார்
மனசுக்குள் தூர் எடுக்க..!"**

**- நா. முத்துக்குமார்.**



இக்கவிதை 9வது வகுப்பு
தமிழ்நாடு அரசு பாடநூல் பக்கம்
எண் 222ல் வெளியிடப்பட்டுள்ளது

# தமிழ் கவிதை

**என்று தீருமோ மணம் முடிப்பதில் மங்கையர்களிற்கு வரும் பெரும் மனச்சிக்கல்?**
**மனங்கவர்ந்தோன் ஒரு புறமும்,**
**ஈன்றாள்-ஈன்றோனின் தேவைகள் மறுபுறமும்**
**மங்கை அவள் நெஞ்சை வாட்டி வதைக்க**
**வாழ்க்கையே வெறுத்துப் போகும்!**
**பெண் அவளென்ன தரம் பிரித்து எடை அளக்கும் தராசோ?**
**இருபுற பாரமும் அவள் இள இருதயத்தை அழுத்த**
**எங்கே சொல்லத் தீரும் அவள் அழுகைகள்?**
**தாய்-தந்தையைத்தாண்டி செல்லும் மன உறுதியும் மின்றி,**
**உள்ளத்தில் உள்ளானை இழக்கும் இரும்பு இதயமும் இன்றி**
**இளங்குயில் அவள் படும் பாடு**
**அப்பப்பா அறைநொடியும் ஆண் இனமோ அதைத்தாங்காது!**
**மாறாக, தாய்-தந்தைக்காகத்தன்னை**
**தள்ளிச்சென்றவளைப்புறம் கூறி துதிபாடி,**
**தன் மனம் தேறும் அற்ப குணமே**
**ஆடவரிற்கு ஆண்டவன் இட்ட சாபம்!**
**அடடா, இறைவன் அவன் படைப்பில் தான் இப்படியும் ஒரு பரிதாபம்!**

HARIPRASAD

**MONTREAL**



மொன்றியல் சிறார்கள் மற்றும் கலைஞர்களின் பல படைப்புகளை இணைத்து மின்னிதழை வெளியிடுகிறோம்.பல உள்ளூர்படைப்பாளர்களை கொண்டு வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.
எப்பொழுதும் போல் தங்களின் கருத்துகளை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம். மற்றும் தங்களின் நட்பு வட்டத்திற்கும் கொண்டு செல்ல உதவுங்கள்.
மொன்றியல் மற்றும் கியூபெக் பகுதிகளில் உள்ள அனைவரும் ஓவியம், கவிதை , கட்டுரை , புத்தக விமர்சனம், சினிமா விமர்சனம், சமையல்குறிப்பு, கை வைத்தியம் மருத்துவக்குறிப்பு, பிள்ளை வளர்ப்பு, சுற்றுலாதளங்கள் என எந்தவொரு படைப்பையும்

EMAGAZINE@TAMILAGAMQUEBEC.ORG

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

தமிழ்ச்சிட்டுக்கள் மின்னிதழை குறித்த தங்களது கருத்துக்களை

EMAGAZINE@TAMILAGAMQUEBEC.ORG

என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்கவும்

நன்றி

தமிழகம் கியூபெக் கலாச்சாரச்சங்கம் மொன்றியல்
தமிழ்ச்சிட்டுக்கள் ஆசியர் குழு

மின்னஞ்சல்-INFO@TAMILAGAMQUEBEC.ORG
முகநூல்- HTTPS://WWW.FACEBOOK.COM/TAMILAGAMQUEBEC
இணை யதளம் -WWW.TAMILAGAMQUEBEC.ORG